அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 11/93

பொதுநிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
1993, ஜூன் மாதம், 04 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசுக்குடைமையான நிறுவனங்களின்
-தலைவர்கள் அனைவருக்கும்.

## இடம்பெயர்ந்தோரில் நாடு திரும்பியவர்களைச் சேவையில் மீள அமர்த்துதல்.

1988.04.25ஆந் திகதிய 14/88ஆம் இலக்க, 1990.08.07 ஆந் திகதிய 33/90ஆம் இலக்க, 1991.02.17ஆந் திகதிய 04/91ஆம் இலக்க 1991.03.14 ஆந் திகதிய 10/91ஆம் இலக்க, 1991.11.14 ஆந் திகதி 53/91ஆம் இலக்க, 1991.12.19ஆந் திகதிய 14/88(1)ஆம் இலக்க, 1992.02.21ஆந் திகதிய 09/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்கு உங்கள் அவதானம் ஈர்க்கப்படுகிறது.

02. மேற்குறித்த அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி சேவையில் மீள அமர்த்தப்பட்டுள்ள அரச அலுவலர்கள் உள்ளூராட்சிச் சேவைப் பணியாளர் அல்லது கூட்டுத்தாபனப் பணியாளர்கள் நிலவிய நிலைமை, அவர்களின் கட்டுப்பாட்டு அப்பாற்பட்டதால், அவர்கள் சேவையில் தொடர்ந்திருந்தாரென்ற அடிப்படையில் பொருத்தமான சம்பள அடிப்படையில் வைக்கப்பட வேண்டும்.

03. பின்வரும் அடிப்படையில் சமூகமளிக்காத காலப் பகுதிக்குத் தங்கள் லீவுகளைப் பயன்படுத்த அவர்கள் அனுமதிக்கப்படல் வேண்டும்.

- (அ) நடப்பாண்டில் பயன்படுத்தப்படாத அமைய, ஒய்வு லீவுகள்.
- (ஆ) நேர்முந்திய ஆண்டில் பயன்படுத்தப்படாத ஓய்வு லீவு.
- (இ) சேவைக்காலத்தின் போது கடந்த ஏதாவது ஈராண்டுகளின் போது பயன்படுத்தப்படாத ஓய்வு லீவு.
- (ஈ) எஞ்சிய காலப்பகுதிக்கு சம்பளமற்ற லீவு.

04. இச்சுற்றறிக்கையின் 03 (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுக் காலப்பகுதி ஒரு விசேட சந்தர்ப்பமாகக் கொள்ளப்பட்டு ஓய்வூதிய நோக்கங்களுக்காகக் கணிக்கப்படும்.

05. இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளும் இலங்கையிலுள்ள அகதிகள் முகாம்களிலிருந்து அகதிகளும் இச் சலுகைக்கு உரித்துடையவர்களாவார்கள்.

ஒப்பம்: கே. எச். கெமிலஸ் பெர்னாந்து.
பதில் செயலாளர்,
பொதுநிருவாக, மாகாண சபைகள்,